**புதுச்சேரி அரசு**
**கலை, பண்பாட்டுத்துறை**

# தொல்காப்பியர் பரிசு

வேண்டுகோள் படிவம்

புகைப்படம்

விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 25.11.2024

1. முழுப் பெயரும், முகவரியும் (குடியிருப்பு சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.) :

2. பிறந்த தேதி (பிறப்புச் சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) :

3. விருது பெறுவதற்கான வெளியீடு குறித்த விளக்கங்கள். :
   அ) நூலின் பெயர் :
   ஆ) நூற் பொருள் :
   இ) பதிப்பித்த நாள் (01.01.2023 முதல் 31.12.2023 வரை) :
   ஈ) பக்கங்கள் :

4. இணைக்கப்பட்டுள்ளவை :
   அ) நூலின் ஐந்து படிகள் :
   ஆ) நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்புகள் :
   இ) நூலாசிரியரின் மற்ற வெளியீடுகளின் பட்டியல் :

5. கைப்பேசி எண் :

## <u>உறுதிமொழி</u>

திரு/ திருமதி ________________________ ஆகிய நான், மேற்கூறப்பட்ட செய்திகள் என் அறிவிற்கெட்டியவரையில் உண்மையானவை என்றும், வேண்டுகோள் நாளுக்குமுன் ஐந்தாண்டு காலத் தொடர் குடியிருப்பினால் நான் புதுவையைச் சேர்ந்தவனென்றும் உறுதி கூறுகிறேன்.

இடம்:

நாள்:

கையொப்பம்

---

**குறிப்பு: பூர்த்தி செய்யப்பட்ட இவ்விண்ணப்பம் இயக்குநர், கலை, பண்பாட்டுத்துறை, எண்.1, ரோமன் ரோலண்ட் வீதி, புதுச்சேரி 605 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்**

# தொல்காப்பியர் பரிசு
# விதிமுறைகள்

1. போட்டிக்கு அனுப்பப்படும் நூல்கள் குறிப்பிட்ட ஆண்டின் முதல் நாளில் இருந்து திசம்பர் 31 – ஆம் நாளுக்குள் அச்சிட்டு முதல் பதிப்பாக வெளியிடப் பெற்றிருக்க வேண்டும்.

2. இப்போட்டியில் வழங்கப்படும் நூல்களை அரசால் நியமனம் செய்யப்படும் ஐவர் அடங்கிய வல்லுநர் குழு ஆராய்ந்து பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கும். இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் நூலாசிரியருக்கு ரூ.10,000/- பரிசுத்தொகையும் சான்றிதழும் அளிக்கப்படும்.

3. பல்கலைக்கழகப் பட்டத்துக்கோ, தேர்வுக்கோ விடுக்கப்பட்ட கட்டுரையும் ஆய்வேடும் இப்பரிசு பெறத் தகுதியற்றவையாகும்.

4. ஒவ்வொரு வெளியிட்டிற்கும் தனித்தனியாக விண்ணப்பப் படிவமும், நூலின் ஐந்து படிகளும் அனுப்புதல் வேண்டும்.

5. போட்டிக்காக வரப்பெற்ற ஐந்து நூல்களை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது.

6. இத்திட்டத்தின் கீழ் ஒரு முறை பரிசு பெற்றவர் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு விண்ணப்பிக்க இயலாது.

7. இத்திட்டத்தில், நூலில் அச்சாகியுள்ள முதல் பதிப்பின் ஆண்டே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும், நூல் வெளியிடப்பட்ட ஆண்டு அன்று.

8. போட்டிக்கு அளிக்கப்பட்ட நூல்கள், வேறு நூலின் சுருக்கமாகவோ, தழுவலாகவோ, மொழிபெயர்ப்பாகவோ, மீள்கூறலாகவோ இருத்தல் கூடாது.

9. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், பயணநூல், கட்டுரைத் தொகுப்பு போன்ற பிரிவுகள் தொல்காப்பியர் விருதுக்குத் தகுதியுடையவை ஆகாது.

10. தொல்காப்பியர் விருதுக்கு விண்ணப்பிக்கப்படும் ஆய்வுப் புத்தகங்கள் 150 பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

11. ஆய்வுப் பதிப்புகள் தமிழ் மொழியில் மட்டுமே இருக்கவேண்டும்.

12. விண்ணப்பிப்போருக்கு வயது வரம்பு கிடையாது.

13. தொல்காப்பியர் விருதுக்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, விருது வழங்கும் வருடத்தில் பதிக்கப்பட்டதாக இருக்கவேண்டும், அதற்கு முந்தைய ஆண்டில் பதிப்பித்ததாக இருக்கக் கூடாது.

14. அ. குறிப்பிட்ட ஒரு ஆண்டில் வழங்கப்படவேண்டிய விருதுகளின் எண்ணிக்கையை கல்விசார் தகுதியைக் கொண்டு ஒருவருக்கும் மேலாக வழங்க அரசுக்கு அதிகாரம் உண்டு.

ஆ. அவசியம் ஏற்படும் போது தொல்காப்பியர் விருது திட்டத்தைத் தற்காலிகமாகவோ, அல்லது ஒருமுறையோ நிறுத்தி வைப்பதற்கு அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

15. நூலாசிரியரின் கையொப்பத்துடன் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

16. விண்ணப்பதாரர் புதுவையில் பிறந்தவராகவோ, ஐந்தாண்டுகள் புதுவை ஒன்றிய ஆட்சிப்பரப்பில் விண்ணப்பிக்கும் நாளுக்கு முன் தொடர் குடியிருப்பு உடையவராகவோ இருத்தல் வேண்டும்.

17. இவ்விருது தொடர்பான விதிகளைத் தேவைக்கேற்ப அவ்வப்போது திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

18. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எழக்கூடிய பிரச்சனைகள் குறித்து அரசால் மேற்காள்ளக்கூடிய முடிவே இறுதியானதாகும். அம்முடிவினை நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தோ பிற வகையிலோ எதிர்த்தல் கூடாது.